1974 சனவரி 23]

திரு. ஏ. சுப்பிரமணியம்: இம்மாதிரித் தணிக்கை செய்பவர்கள் தவறுகளைக் கண்டுபிடித்திருக்கிறார்களா? எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பொதுப்படையாகச் சொல்லுவதற்கில்லை. ஒவ்வொரு கல்லூரியைப் பொறுத்தும் தணிக்கையாளர்கள் தணிக்கை செய்து அதுபற்றிய அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார்கள். குற்றங்கள், குறைகள் இருக்குமானால் நிவர்த்திக்க வேண்டுமென்று அந்தந்தக் கல்லூரித் துறையினர் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ஸ்பெஷல் பீஸ் என்றும், டொனேஷன் என்றும் தனியார் கல்லூரிகளில் மாணவர்களிடமிருந்தும் பெற்றோர்களிடமிருந்தும் வசூலிக்கிறார்கள். இதை முறைப்படுத்த தணிக்கை அதிகாரிகள் என்ன வழிவகைகளைச் செய்கிறார்கள், இன்ஸ்பெக்ஷன் இருக்கிறதா? அது சம்பந்தமான விவரங்களை அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஏற்கனவே இவற்றைப் பரிசிலித்து மாறுதல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. டியூஷன் ஃபீஸ், நன்கொடையாக வருகிற தொகை எல்லாம் கணக்கில் வர வேண்டுமென்றும் மொத்தச் செலவில் வரவினத்தை கழித்த பிறகு டெபிசிட் ஏற்படுமானால் அதிலே 80 சதவிகிதத்திற்கு அரசு பொறுப்பேற்றுக்கொள்ளும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஓசூரில் புதிய கல்லூரி

* 94 வினா.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூரில் ராஜாஜி நினைவுக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்படவேண்டும் என்று அப்பகுதி மக்களிடமிருந்து 1973 ஆகஸ்டில் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கையின் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ராஜாஜியின் ஞாபகார்த்தமாக ஒரு அரசு கல்லூரியை ஓசூரில் ஏற்படுத்த வேண்டும் என்று ஓசூர் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர் மூலமாக ஆளுநரிடம் ஒரு மனு 8—8—1973 அன்று கொடுக்கப்பட்டது. அந்த வேண்டுகோளை அரசு ஆராய்ந்து பார்த்து, வழக்கமாக விதிக்கும் நிபந்தனைகள் நிறைவு செய்யப் பட்டால், அரசு கல்லூரி ஒன்று துவக்குவது பற்றிப் பரிசீலிக்கலாம் என்று குறிப்புரை அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஓசூர் பகுதி மக்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகையையும் நிலத்தையும் தரத் தயாராக இருக்கிறார்கள். அடுத்து வருகிற ஆண்டில் இந்தக் கல்லூரியை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரக் குறிப்பு ஒன்றும் அரசுக்குக் கிடைக்கவில்லை. ராஜாஜிக்கு நினைவுச் சின்னங்கள் வைக்கவேண்டுமென்ற முறையில் ஓசூரில் ராஜாஜி பிறந்த வீட்டை நினைவுச் சின்னமாக மாற்றும் வகையில் அதைப் பெறுவதற்கான முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. அங்கு கல்லூரி வேண்டுமென்பது பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று. அரசே புதிய கல்லூரிகளைத் திறப்பதை நிறுத்தி ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட கல்லூரிகளில் வசதி வாய்ப்புக்களைப் பெருக்க வேண்டுமென்பதிலே கவனம் செலுத்தி வருகிறது. ஓசூரைப் பொறுத்தவரை 40 ஏக்கர் நிலமும் 5 இலட்சம் ரூபாய் பணமும் தர முன்வந்தால் அந்தக் குழுவினர் கல்லூரி தொடங்கப் படும் போது அந்தப் பெயரை வைத்துக் கொள்வதில் ஆட்சேபனை இல்லை. அப்போது அரசு அதுபற்றிப் பரிசீலிக்கும்.

THIRU B. VENKATASAMY : Sir, we have given a representation to His Excellency the Governor and we have also received a reply stating that it would be considered if the conditions as already told by our Hon. Minister for Education, were satisfied. The Hon. Chief Minister and everybody knows that Hosur is a backward area. We are prepared to give 40 acres of land for the construction of Arts College. May I request the Hon. Minister for Education to give exemption with regard to deposit amount of Rs. 5 lakhs due to the backwardness of the area. Now many industries are coming up and the persons employed in such

1974 சனவரி 23]

industries are interested in educating their children there. May I once again request the Hon. Minister to give exemption from payment of Rs. 5 lakhs?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எங்கேங்கு புதிய கல்லூரி தேவை என்று கேட்டாலும் இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால்தான் அனுமதி கொடுக்கிறோம். இந்தப் பகுதி பிறபட்ட பகுதி, இந்தப் பகுதி முற்பட்ட பகுதி என்றெல்லாம் பிரிக்க முடியாது. ஐந்து லட்சம் ரூபாய் தந்தாலும் அரசு 25 லட்சம் ரூபாய் செலவழித்தால்தான் முதல்தரமான கல்லூரியாக அமையும் ஒரு இடத்திற்கு இந்த விதியைத் தளர்த்தினால் தொடர்ந்து தளர்த்தும்படியான நிலைமையில் எல்லோரும் கேட்பார்கள். ஆகவே, அந்த விதியைத் தளர்த்துவதற்கில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the Government has great regard for revered Rajaji and also interest to put up a memorial for his memory. Of all the memorials, the best one will be the construction of a College at Hosur. This is a most important one. May I know whether the Government will give preference to the sanction of an Arts College at Hosur at the cost of Government itself ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே குறிப்பிட்டபடி ராஜாஜியின் நினைவாக பல்வேறு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. ஏற்கனவே ராஜாஜி மண்டபம் இருக்கிறது என்றாலும் நினைவுச் சின்னமாக ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் கிண்டியில் மண்டபம் கட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஓசூரில் பிறந்த வீட்டை ஆர்ஜிதம் செய்து நினைவுச் சின்னம் ஏற்படுத்தும் நிலைமை இருக்கிறது. கல்லூரிக் குழுவினர் விரும்பினால் அந்தப் பெயரை வைக்க ஆட்சேபணை இல்லை. நிபந்தனைகளை நிறைவேற்ற முன்வரவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : அரசாங்கக் கலைக் கல்லூரிகளுக்கு அமைச்சர்கள் பெயரை வைத்திருக்கிறார்கள். தலைவர் ராஜாஜி மிகச் சிறந்த அரசியல் வாதி. அவர்கள் பெயரால் கல்லூரி அமைக்க 5 இலட்சம் ரூபாய் கொடுங்கள் என்று கேட்காமல் கொஞ்சம் தாராள மனப்பான்மையோடு இனிமேல்

கட்டுகின்ற கல்லூரிக்கு ராஜாஜி பெயரை வைக்க முன்வருவார்களா? குறிப்பாக ஓசூரில் அரசாங்க கலைக் கல்லூரியைக் கட்டி ராஜாஜி பெயரை வைக்க முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது வைக்கப்பட்டிருக்கும் பெயர்கள் எல்லாம்கூட ஆங்காங்கு நிதி வசூலில் ஈடுபடுகின்ற குழுவினர் என்ன பெயரைச் சிபாரிசு செய்கிறார்களோ அந்தப் பெயர்தான் அந்தந்தக் கல்லூரிகளுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் என்ற பெயரில் எந்தக் கல்லூரிக்கும் பெயர் வைக்கப்படவில்லை. ஐந்து லட்சம் ரூபாயைத் திரட்டிக் கொடுத்து இன்னார் பெயரை வைக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி முறைப்படி அனுப்பி வைத்தால் அந்தப் பெயரை வைக்கலாம். அதற்கான முயற்சியில் ஈடுபடும்படியாக அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

Grants to Nayanam, Thavil Music Research Academy at Tiruvarur

* 95 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the Government have given any grants to the Nayanam, Thavil Music Research Academy at Tiruvarur in Thanjavur district during the past five years; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : இங்கு எல்லா மியூசிகல் இன்ஸ்ட்ருமென்ட்சும் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு கொடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்படி நாயனம், தவில் போன்றவற்றை ஊக்குவிக்க வேண்டுமென்ற முறையில் அரசாங்கம் ஈடுபடவில்லை, இயல் இசை நாடக மன்றத்தின் மூலமாக வசதி வாய்ப்புகள் செய்து தரப்படுகிறது. சிலபல கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள் மற்றவைகளை ஏற்பாடு செய்யவும், நாதஸ்வரம், தவில் கச்சேரி ஏற்பாடு செய்யவும் இயல் இசை நாடக மன்றம் உதவி செய்து வருகிறது. வயதான கலைஞர்கள், தவில், நாயன வித்வான்கள் 58 வயதானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு உதவிச் சம்பளம் அளிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.